

சேலம் மாவட்டத்தில் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழுத் தலைவர் –கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் நேற்று பொது மக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ராஜேந்திரன், கே.ஆர்.என். ராஜேஷ்குமார் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.



தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவருமான பூச்சி எஸ் முருகன் நேற்று (11.02.2024) காலடிப்பேட்டை தனலெட்சுமி பார்ட்டி ஹாலில் நடைபெற்ற கழக நிர்வாகி பி.எஸ். சைலஸ் – சுகந்தி தம்பதியின் மகள் பி.எஸ். பொய்யாமொழி – சி.எஸ்.ராஜ்குமார் திருமண உறுதியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### நே.சிற்றரசு தலைமை! நா.எழிலன் முன்னிலை! ஆயிரம்விளக்கு - 118 வது வட்ட அவைத் தலைவர்

# க.அன்பழகன் இல்லத் திருமண வரவேற்பு விழா: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

### மு.க.தமிழரசு - தயாநிதி மாறன் - அன்பகம் கலை பங்கேற்பு! மா.பா.அன்புதுரை - கோ.யுவராஜ் வரவேற்பு!

சென்னை, பிப். 12-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்டக் கழக அவைத் தலைவர் க.அன்பழகன் - ஜானகி அன்பழகன் ஆகியோரின் புதல்வர் அ. சுரேஷ்குமாருக்கும், இங்கிலாந்து, லண்டனைச் சேர்ந்த சிவராஜா - மகாலட்சுமி சிவராஜா ஆகியோரின் புதல்வி மருத்துவர் சி.சிந்துஜாவிற்கும் திருமண வரவேற்பு விழா இன்று (12.2.2024 - திங்கட்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கத்தில் உள்ள ஹோட்டல் பாம்குரோவில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பிற்கு சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமை வகிக்கிறார்.

ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன் முன்னிலை வகிக்கிறார்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிச் செயலாளர் மா. பா.அன்புதுரை, 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இவ்விழாவில் மு.க.தமிழரசு, தயாநிதி மாறன் எம்.பி, அன்பகம் கலை, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ, மருத்துவர் கலை கதிரவன், எஸ்.மோகன், ந.இராமலிங்கம், எஸ். மதன்மோகன், நுங்கை வி. எஸ்.ராஜ், வினோத் வேலாயுதம், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், ச.பரமசிவம், வி.என். ராஜன், நந்தனம் மதி, எஸ். முரளி,

து.விக்டர், அரிமா ஆர். என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, எம்.டி.ஆர். நாதன், ஜெ.நற்குணநாதன், டி.ஜோஸ் டானியல், பா.ராபர்ட், வெற்றிச் செல்வி, எம்.ஐம்புலிங்கம், ம.ஜெயக்குமார், மு.வெங்கடேசன், கோ.ரவி, வைலட் மேரி, எஸ்.என். கே.ராமன், எப்.பீட்டர் ஜான், நுங்கை ப.மகேஷ், ஆர்.பாபு, எஸ்.சத்தியபெருமாள், எல்.தவமணி, த.தேவராஜ், எம்.என். விஷ்ணு, மல்லிகா யுவராஜ் எம்.சி, திருமலை பொன்னுரங்கம் எம்.சி, எம்.ஏ.நந்தினி எம்.சி, பிரேமா சுரேஷ் எம்.சி, எலிசபத் அகஸ்டின்பாபு எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஏ.வி.ராமநாதன், ப.வினோத்குமார், ம. வேலுமணி, பொ. திருத்தணி, எஸ்.சேகர், ஜா.கண்ணன், கு.தீபன்சக்கரவர்த்தி, வி.வி.மணி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# விருத்தாச்சலத்தில் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

விருத்தாச்சலம், பிப்.12-

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ - பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்’ என்ற தலைப்பில் மாபெரும் பொதுக் கூட்டம் விருத்தாச்சலத்தில் வருகிற 17-ஆம் தேதி அன்று நடைபெறுகின்றது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றுகிறார் என்று கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை வருமாறு:-



கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் விருத்தாசலத்தில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” - பாசிசம் வீழட்டும், இந்தியா வெல்லட்டும்” என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 17.2.2024-சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, வானொலித்திடல் விருத்தாச்சலத்தில் என் (அமைச்சர் சி.வெ.கணேசன்) தலைமையில் நடைபெறுகின்றது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

எனவே பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணியைச் சேர்ந்த நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றத்தின் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### குடும்ப அட்டைதாரர்கள்

# வசதிப்படி கைரேகை பதியலாம்!

**தமிழ்நாடு அரசு தகவல்!**

சென்னை,பிப்.12-

குடும்ப அட்டைதாரர்கள் தங்களது வசதியின்படி நியாய விலைக் கடைக்கு வந்து கைரேகை பதிவு செய்யலாம் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

கட்டாயப்படுத்தி நியாய விலைக் கடைக்கு வரவழைத்து சிரமங்களை ஏற்படுத்தக் கூடாது என்றும், குடும்ப அட்டைதாரர்கள் கைவிரல் ரேகை வைக்கும் போது ஆவணங்கள் எதுவும் கோரக் கூடாது என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

நியாயவிலைக் கடைகளில் கைரேகையைப் பதிவு செய்யா விட்டாலும், குடும்ப அட்டையில் இருந்து பெயர் நீக்கப்படாது என்று முன்னதாக தமிழக அரசு விளக்கம் அளித்திருந்தது.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின்படி, முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா மின்னணு குடும்ப அட்டைகளில் இணைக்கப்பட்ட அனைத்துப் பயனாளிகளின் கைவிரல் ரோகையை சரிபார்க்க வேண்டுமென மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியது.

அதன்படி, குடும்ப உறுப்பினர்களுக்கு இடையூறு ஏதுமில்லாமல் இந்தப் பணியைச் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.


